**Sub Court, Eraniel**

**O.S. No.64/2023**

Date: 13.11.2024.

வா.சா.1 - திருமதி. செல்லநாடாச்சி.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1. 05.12.2006 ல் தங்க சொர்ணத்திடம் வாங்கிய ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்தது நான் தான். அந்த ஆவணத்தில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். அதில் குறிப்பிட்டிருக்கும் ரூ.40,000/- ஐ நான் கடன் வாங்கிக் கொடுத்தேன். ஊர்த் தலைவரிடம் ரூ.10,000/-, என்னுடைய கொளுந்தனார் தர்மலிங்கத்திடம் ரூ.25,000/-, வாங்கினேன். மீதிப்பணம் நான் வேலை செய்து சம்பாதித்தது. இதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் கிடையாது. அந்த சமயத்தில் ரூ.40,000/- கிரயத் தொகையை எனது மகன் மணிகண்டன் கொடுத்து தான் நான் அந்த கிரயம் என் பெயரில் செய்தேன் என்றால், சரியல்ல. எனக்கு வங்கிக் கணக்கு IOB மண்டே மார்க்கெட் கிளையில் உள்ளது. 100 நாட்கள் வேலை திட்டத்தில் 10 வருடங்கள் வேலை செய்கிறேன். அதில் 1 நாளுக்கு ரூ.180/- வருமானம் வரும். வங்கிக் கணக்கு 10 வருடங்களுக்கு முன்பு தொடங்கி விட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணம் எனது மகன் மணிகண்டன் பெயருக்கு நான் எழுதிக் கொடுத்தது என்றால், சரிதான். எனக்கு கண் கண்ணாடி போடும் பழக்கம் கிடையாது. நான் எனது இளைய மகன் மணிகண்டன் வீட்டில் தனியாக குடி வசிக்கிறேன். எனது சாப்பாடு பராமரிப்பு ஆகியவற்றை நானே செய்து கொள்கிறேன். எனக்கும் எனது மூத்த மருமகள் ஷோபலதாவிற்கும் எனக்கும் விரோதம் ஏதும் கிடையாது. ஷோபலதா 12 ம் வகுப்பு படித்திருக்கிறார். 15.07.2020 ல் நான் எனது இளைய மருமகளுக்கு எழுதிக் கொடுத்த விடுதலைப் பத்திரம் ஏமாற்றி எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு 1 மாதத்திற்குள் தெரிய வந்தது. அது சம்மந்தமாக நான் உடனே தக்கலை ஆர்.டி.ஒ அலுவலகத்தில் மனு கொடுத்தேன். மனு கொடுத்த தேதி நினைவில் இல்லை. அது சம்மந்தமாக விசாரணை நடந்தது. தேதி நினைவில் இல்லை. கலெக்ட்டர் ஆபிஸ், எஸ்.பி. ஆபிசிலும் இவ்வாறு மனு கொடுத்தேன். அந்த மனுக்களின் நகல்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. நான் உண்மைக்கு மாறாக இவ்வாறு குறிப்பிடுகிறேன் என்றாலும் நான் முதன் முதலாக 22.08.2022 ல் மாவட்ட ஆட்சியாளரிடம் நான் மனு கொடுத்தேன் என்றால், சரியல்ல. தற்போது

என்னிடம் காட்டப்படுவது அவ்வாறு நான் மாவட்ட ஆட்சியாளரிடம் கொடுத்த மனு என்றால், சரிதான். அந்த மனு மற்றும் விசாரணை அறிக்கை பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த மனுவின் விபரங்கள் நான் கூறினேன். அதை எழுதியது எழுத்துக்காரர். அவருடைய பெயர் நினைவில் இல்லை. திங்கள் சந்தையில் இருப்பவர். அந்த மனு மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகத்தில் இருந்து அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டது என்றால், சரிதான். அங்கு நான் ஒரு வாக்குமூலம் கொடுத்து அதுவும் தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த மனுவில் எனக்கு எழுதப் படிக்கத் தெரியும் என்ற விபரத்தை நான் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில், கடைசி பத்தியில் எனது பேத்தியின் வாழ்வாதாரத்திற்கும் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரிதான். பிராதில் 3 சொத்துக்களில், 2 சொத்துக்கள் என் பேத்தியின் பெயரில் உள்ளது. மீதி உள்ள ஒரு சொத்து எனக்கு வேண்டும். அந்த சொத்து ரூ.50,00,000/- பெறும் என்று சொல்வது அதனை வாங்கும் போதே அதன் விலை ரூ.20,00,000/-. அவ்வாறு வழக்கிற்காக நான் தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. பிராதில் குறிப்பிட்டுள்ள ஆர்.ஆர்.சசி என்பவரை எனக்குத் தெரியாது. பிறகு தெரியும். 2022ல் திருமணம் நடந்தது எந்த தேதி என்று தெரியாது. 1வது பிரதிவாதியின் திருமணத்திற்கு பிறகு தான் 2022 8வது மாதத்தில் புகார் மனுக்களை கலெக்ட்ர் ஆபீஸ் முதலானோருக்கு எழுதினேன் என்றால், சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.